# துறையூர் நகராட்சி

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31.01.2025 வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணிக்கு நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் கீழ்க்கண்ட பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

**முன்னிலை:**
நகர்மன்றத்தலைவர்
துறையூர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 31.01.2025 | 01 | துறையூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 மருத்துவமனை சாலையில் உள்ள பழைய தாய்சேய் நலவிடுதி கட்டிட மேற்கூரை பழுதடைந்துள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி அதன் உட்புறம் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் புதிதாக Weathering Course, Pressed Tiles, மின் உபகரணங்கள், குடிநீர் வசதி, வர்ணம் அடித்தல் பணி மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 352 /2025/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:363 அனுமதி வழங்கப்பட்டது |
| 31.01.2025 | 02 | துறையூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பகுதிக்கும் மின்சார தேவைக்கேற்ப மின்மாற்றி மின்சார வாரியம் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் Control Box பொருத்த வேண்டிய அவசியமாவதால் மின்மாற்றி புதிதாக வைக்கப்பட்ட பகுதிகளில் 20 எண்ணிக்கை Control Box, PVC Pipe, 7/20 Wire தேவைக்கேட்ப வாங்கி பொருத்திடவும் அதற்கான மதிப்பீடு ரூ.4.60 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 356 /2025/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:364 அனுமதி வழங்கப்பட்டது |
| 31.01.2025 | 03 | துறையூர் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022-23ன் கீழ் மதிப்பீடு ரூ.122.00 இலட்சத்திற்கு அறிவுசார் மையம் அமைக்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது. மேலும் அறிவுசார் மைய மதிப்பீட்டில் அல்லாத சிசிடிவி கேமரா, குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம், உணவு அருந்தும் கூடம், கூடுதலாக ரேக் அமைக்கும் பணி, மின்விசிறிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.355 /2025/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:365 அனுமதி வழங்கப்பட்டது |
| 31.01.2025 | 04 | துறையூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 நகராட்சி பள்ளியில் சமூக விரோத செயல்கள் நடைபெறாமல் தடுக்க துவக்கப்பள்ளிக்கும் உயர்நிலைப்பள்ளிக்கும் இடையில் சுற்று சுவர், கேட் அமைக்கும் பணி மற்றும் இரு பள்ளிகளுக்கும் LED விளக்குகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 354 /2025/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:366 அனுமதி வழங்கப்பட்டது |
| 31.01.2025 | 05 | துறையூர் நகராட்சி வார்டு எண்.4 துவக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளியில் உள்ள பள்ளி பழைய வகுப்பறைகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், பழுதடைந்த Weathering Course, Pressed Tiles, பணிகளை புதுப்பிப்பதற்கும், வர்ணம் அடித்தல் பணி மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். 353 /2025/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:367 அனுமதி வழங்கப்பட்டது |

<table>
<tr>
<td>31.01.2025</td>
<td>06</td>
<td>துறையூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 தெப்பக்குளம் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகம் பாதுகாப்பு நலன் கருதி ஏற்கனவே உள்ள சுற்றுச்சுவர் உயரம் தாழ்வாக உள்ளதால் தற்போது அதனை உயர்த்தி கட்டுவதற்கும் மற்றும் காவலர் அறை, மேற்கூரை, மின் உபகரண மராமத்து பணி, பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணி, வர்ணம் அடித்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். 357 /2025/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td>தீர்மான எண்:368 அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.01.2025</td>
<td>07</td>
<td>மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களது அறிவுறுத்தலின்படி தினமணி, தினபூமி நாளிதழ்களில் 2024 ஆயுதபூஜை, தீபாவளி தொழில் மலரில் துறையூர் நகராட்சியால் செயல்படுத்தும் திட்ட பணிகள் குறித்த விவரங்கள் விளம்பரமாக வெளியிட்டமைக்கான விளம்பரக் கட்டணம் ரூ.31500/- வழங்கிட மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.1359/2024/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:369 அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.01.2025</td>
<td>08</td>
<td>துறையூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 தியாகி சிங்காரவேலர் தெருவில் உள்ள பழைய ஆணையர் குடியிருப்பு கட்டிடத்தின் அருகில் உள்ள அங்கன்வாடி மையத்தின் மேற்கூரை பழுதடைந்துள்ளது. இதனால் அங்குள்ள குழந்தைகள் அமர்வதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லாத காரணத்தினால் அருகில் உள்ள ஆணையர் குடியிருப்பு கட்டிடத்தில் உள்ள கதவு, ஜன்னல்கள், மின் உபகரணங்கள், குடிநீர் குழாய்கள், தரைத்தளம் ஆகியவற்றை சீர்செய்திடவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண். /2025/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:370 அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.01.2025</td>
<td>09</td>
<td>துறையூர் நகராட்சியில் மஞ்சப்பை வழங்கும் தானியங்கி இயந்திரம் புதிய நகராட்சி அலுவலகம் மற்றும் பழைய நகராட்சி அலுவலகத்தில் செயல்படுத்திட 2 எண்ணிக்கையிலான Vending Machine விநியோகம் செய்யும் பணி மற்றும் ஒரு ஆண்டிற்கான பராமரிப்பு பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.343 நாள்.11.12.2024ல் ஒப்புதல் வழங்கியதை அனுமதி வழங்கியதை தொடர்ந்து 13.01.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>GB ENGINEERING ENTERPRISES,<br>No.53, Thimmaraya Samuthiram,<br>Thiruvanaikovil, Trichy</td><td>மதிப்பீட்டை விட 0.02% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>SRI AKSHAYA TRADERS,<br>No.4/10, East Sarayapattarai Street,<br>Woraiyur, Trichy.</td><td>மதிப்பீட்டை விட 1.36% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள M/S GB ENGINEERING ENTERPRISES, Trichy அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.02% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4560/2024/எச்1)<br>அலுவலக குறிப்பு :<br>மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட M/S GB ENGINEERING ENTERPRISES, Trichy அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்:371 அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>31.01.2025</td>
<td>10</td>
<td>

துறையூர் நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதால் அன்றாடம் நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் தட்டச்சு செய்தல், நகர்மன்ற கூட்டப்பொருள் தட்டச்சு செய்தல், நகர்மன்ற கூட்டப்பொருள் தட்டச்சு செய்தல் ஆய்வறிக்கை ஆகிய பணிகள் செய்ய 12 மாதங்களுக்கு 3 பணியாளர்கள் பெற்று தட்டச்சு பணி செய்திட 20.12.2024- அன்று கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனம்</th><th>தொகை</th><th>தொகை</th></tr>
<tr><td>1</td><td>Sass Computers<br>HCL Channel Partner,<br>#9, Bus stand, Thuraiyur.</td><td>ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு</td><td>ரூ 990/-</td></tr>
<tr><td>2</td><td>Pranav systems<br>No 120 SRS Nagar,<br>Thuraiyur 621010</td><td>ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு</td><td>ரூ 890/-</td></tr>
<tr><td>3</td><td>Sathya Computers.<br>#3N/10-ON MAHAL Under ground, Bus Stand,Thuraiyur.</td><td>ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு</td><td>ரூ 772/-</td></tr>
<tr><td>(அ.கு)</td><td colspan="3">1. பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள சத்யா கம்ப்யூட்டர்ஸ், துறையூர் விலைப்புள்ளியை ஏற்கலாம். மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களது செயல்முறை ஆணை ந.க.எண்.RCJ3/769/2024 Dt 15/05/2024 ல் தெரிவிக்கப்பட்டுள்ள தொகையினையே தினக்கூலியாக வழங்க கோரி உள்ளதால் ஏற்கலாம்.</td></tr>
<tr><td></td><td colspan="3">2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.</td></tr>
</table>

ந.க.எண்.3689/2023/சி1
</td>
<td>தீர்மான எண்:372<br>அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.01.2025</td>
<td>11</td>
<td>துறையூர்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் 1 பேருந்துநிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரிகட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், 2 நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், 3 அண்ணாபேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டணகழிப்பிடத்தில் உபயோக்கும் நபர்களிடம் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் குத்தகை உரிமம் 4. துறையூர் நகராட்சி பழைய நகராட்சி அலுவலகத்தில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் இரு சக்கரவாகனம் நிறுத்திக் கொள்வதற்கான குத்தகை உரிமத்திற்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் 5 துறையூர், நகராட்சிக்கு சொந்தமான தினசரிகாய்கனி மார்க்கெட்டில் கட்டியுள்ள 1 முதல் 45 கடைகள் மற்றும் அதற்கும் செல்லும் நடைபாதைகள் நீங்கலாக பின் பக்கம் (கிழக்கே) உள்ள காலியிடத்தில் தரையில் வைத்து விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். துறையூர்நகராட்சிக்கு சொந்தமான சுவாமிநாதன் தினசரி மார்க்கெட் கடைகள், 15,16,17,18.34,42,43,44 மற்றும் 45க்கான குத்தகை உரிமம் துறையூர் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 3,4,6,8,9,10 ,11,12,13,14,15,16, மற்றும் 17 துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலக வளாக புதிய கடை எண் 2,4,5,6,7,9, 10,18,23 மற்றும் 24 குத்தகை உரிமங்கள் 2024-2027 முடிய மூன்றாண் டுக்கான உரிமம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 21.12.2024-ம் தேதி நடைபெறும் விபரத்தினை பொதுமக்கள் மற்றும் குத்தகை தாரர்கள் தெரிந்துகொள்ளும் விதமாக கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.</td>
<td>தீர்மான எண்:373<br>அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>வ. எண்</td><td>விளம்பரம்செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</td><td>விளம்பரம் செய்யப்பட்டநாள்</td><td>தொகை (ரூபாய்)</td></tr>
<tr><td>1</td><td>தினகரன், திருச்சி பதிப்பு</td><td>21.12.2024</td><td>ரூ.28739/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு செய்யப்பட்டதற்கு ADWAVE Advertisng private limited Chennai நிறுவனத்திற்கு ரூ.28739/-வழங்க கேட்டுக்கோன்டுள்ளது.ஆகையால் செலவினத்தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.ந.க.எண்.1096/2023/அ1<br>
<u>அலுவலககுறிப்பு:</u><br>
அ) அனுமதிக்கலாம்<br>
ஆ) செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து செலவு செய்யலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>31.01.2025</td>
<td>12</td>
<td>
துறையூர் நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில் 20KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.--- நாள்.11.12.2024ல் ஒப்புதல் வழங்கியதை அனுமதி வழங்கியதை தொடர்ந்து 31.12.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.17% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்</td><td>மதிப்பீட்டை விட 0.20% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.17% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண்.4122/2024/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் குறிப்பிட்ட திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்:374 அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.01.2025</td>
<td>13</td>
<td>
துறையூர் நகராட்சி வார்டு எண்.18 சொரத்தூர் சாலை உரக்கிடங்கு பகுதியில் மழைநீர் வடிகால் பழுதடைந்த நிலையில் உள்ளதால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து செல்ல இயலாத நிலையில் உள்ளது. ஆகையால் சாலையின் இருபுறமும் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.75 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
(ந.க.எண். /2025/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்:375 அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>31.01.2025</td>
<td>14</td>
<td>
துறையூர் நகராட்சி வார்டு எண்.22 எக்ஸ்டென்சன் பகுதியில் மழைநீர் வடிகால் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் வடியாமல் தேங்கி நின்று அப்பகுதியில் சுகாதார கேடு ஏற்படுகிறது. ஆகையால் அப்பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். /2025/இ1)<br>
அலுவலக குறிப்பு :<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்:376 அனுமதி வழங்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **31.01.2025** | **15** | துறையூர் நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2024–25ம் ஆண்டின் கீழ் Tied Grant ஒதுக்கீட்டின் கீழ் ஆத்தூர் சாலை வார்டு எண்.1ல் உள்ள எரிவாயு தகனமேடையை பழுது மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்வதற்கு ரூ.39.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.37751/2024/EA–2 நாள்.19.12.2024 அன்று அனுமதி வழங்கப்பட் டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.3100/2024/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண்:377 அனுமதி வழங்கப்பட்டது |
| **31.01.2025** | **16** | துறையூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2024–25 (Phase–IV)ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய குடிநீர் திட்டத்தில் குழாய்கள் பதித்தலின் போது பழுதடைந்த தார்சாலைகளை சீரமைத்தல் பணிக்கு ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் 5 சிப்பங்களாக பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.2459/2024/SS1 நாள்.20.01.2025 அன்று நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.4653/2024/இ1)<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பதிவு செய்யலாம். | தீர்மான எண்:378 அனுமதி வழங்கப்பட்டது |
| **31.01.2025** | **17** | **<u>நகர்மன்ற தலைவர் திருமதி இ.செல்வராணி அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்.</u>**<br>துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலைய வளாகத்தின் முகப்பு பகுதி, வார்டு எண். 20–ல் சர்வே எண். 370/1 ல் பேருந்து நிலைய நுழைவாயிலில் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி , அவர்ளின் வெண்கல சிலைக்கு அருகில் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அறிஞர் சி.என்அண்ணாதுரை , மற்றும் தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களின் முழு உருவ வெண்கல சிலை அமைத்திட அரசு வழிகாட்டுதல் மற்றும் விதிகளுக்கு உட்ப்பட்டு உரிய அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்:379 அனுமதி வழங்கப்பட்டது |

ஒம்/- இ.செல்வராணி
நகர்மன்றதலைவர்
துறையூர்நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர்நகராட்சி